இது யுத்தம் செய்திடும் புமி இனி நித்தம் வெல்லுமடா
இது ரத்தம் சிந்திடும் வாழ்வு அதில் அர்த்தம் உள்ளதடா

நாம் போகும் திசையில் தீ வெள்ளம் பெருகும்
தடையாகும் இடமெல்லாம் அழிவாகிக் கருகும்
புயலாகும் அசைவில் புதுவாழ்வு தெரியும்
தேசத்தை நேசித்து தேகம் மண்ணில் எரியும்

இது யுத்தம் செய்திடும் புமி இனி நித்தம் வெல்லுமடா
இது ரத்தம் சிந்திடும் வாழ்வு அதில் அர்த்தம் உள்ளதடா

பகைவனே பாரடா பாயும் வேங்கை கூட்டமடா
பாடையில் உன்னை ஏத்திவிடும் தேசப்புயலகள் நாங்களடா
உலிவிந்த மண்ணடா உயர்வுகள் தந்தவன் தலைவனடா
காடு மேடு தாண்டிவந்து கடமை முடிப்போம் உறுதியடா
முடியாது என்ற வார்த்தை எங்கள் வாழ்வில் கிடையாது
முயற்சியை தோழில் தூக்கி நடந்தோம் வீர வரலாறு
இனம் வாழ இனம் வாழ எம் உயிரோ உடலோ எதுவும் கொடுப்போம்
போர் எழுதும் வரலாற்றில் புதிதாய் நாங்கள் பிறப்போம்
நீ கசியும் நெஞசுக்குள்ளே உணர்வாய் உறவாய் என்றும் நிற்போம்

இது யுத்தம் செய்திடும் புமி இனி நித்தம் வெல்லுமடா
இது ரத்தம் சிந்திடும் வாழ்வு அதில் அர்த்தம் உள்ளதடா 2

மரணமோ ஒருமுறை கோழை சாகிற பலமுறை
சாவைக்கூட வீரம் வெல்லும் வாழ்வு கண்ட நெறிமுறை
கொள்கையுள்ளவன் வாழ்வை வெல்வான் விதிமுறை
இடறோ துயரோ எதுவென்றாலும் கடப்பது தானே வழிமுறை
தவைவனின் பார்வையே கரும்புலிகள் எமக்கு வழிகாட்டி
தமிழ் இனம் வாழவே எம் உடலில் எங்கும் தீ மூட்டி
விரைகின்றோம் விரைகின்றோம் எம் தேசம் மீழும் நாழுக்காக
பாதங்கள் சோராது எம் பயணம் என்றும் ஓயாது
தாகங்கள் தீராது தமிழ் வீரம் என்றும் சாயாது

இது யுத்தம் செய்திடும் புமி இனி நித்தம் வெல்லுமடா
இது ரத்தம் சிந்திடும் வாழ்வு அதில் அர்த்தம் உள்ளதடா